**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 138 /2021**

**Deposition of P.W.** 7

Name : திரு. ரவீந்திரன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:28.01.2026

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது மதுரை திருப்பாலையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது உதவி ஆய்வாளர் திருமதி, மேரிஅனிதா 27.03.2018 அன்று நிலைய பொறுப்பில்இருந்த போது பதிவு செய்யப்பட்ட நிலைய குற்ற எண்.67/2018 பிரிவுகள் 294(பி), 332, 323, 307, 506(2) இ.த.ச வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சாட்சிகள் மனோகரன், அஜின் ஆகியவர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4. 10.45 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் எதிரி ஓட்டி வந்து நிறுத்தி சென்ற

மகேந்திரா மேக்சிகேப் வாகன எண்.TN 75 B 1189 வாகனத்தை அதே சாட்சிகன் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.5. எதிரியை சுமார் 13.30 மணிக்கு சித்திரங்கோடு பஸ் நிறுத்தத்தில் வைத்து கைது செய்தேன். சுமார் 14.00மணிக்கு எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கின் சொத்துடன் நிலையம் கொண்டு வந்து படிவம் 91 தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 அ.சா.ஆ.6. TN 75 B 1189 வாகனம் சா.பொ.1. இந்த வழக்கு சம்மந்தமாக சாட்சிகள் செல்லத்துரை, சேதுநாத், செல்வம், ஜெய்சிங், ஜாண் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான மனோகரன், அஜின் ஆகியவர்களுடன் கிருஷ்ணணன் மற்றும் உதவி ஆய்வாளர் திருமதி. மேரிஅனிதா ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் வழக்கின் எதிரியை நீதிமன்ற காவலுக்கு தக்க வழிக்காவலுடன் அனுப்பி வைத்தேன். வழக்கின் விசாரணை முற்றுப்பட்ட நிலையில் 18.08.2018 அன்று வழக்கின் இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

26.03.2018ம் தேதி நடைபெற்ற சம்பவத்திற்கு 27.03.2018ம் தேதி புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகார் கொடுப்பதில் ஏற்பட்ட காலதாமதம் குறித்து புகார்தாரரை விசாரிக்கவில்லை. அ.சா.ஆ.1 புகாரில் மேலாளரின் அறிவுரை படி புகார் கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொன்னதுபோல் சம்பவம் நடக்காததால் தான் சொன்ன தேதியில் புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. திருவட்டார் காவல்நிலையத்தை கடந்து தான் அரசு பணிமனைக்கு செல்ல

வேண்டுமென்றால் சரிதான். புகாரில் சம்பவ இடம் பற்றி குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. ரோட்டின் இடது பக்கமா, வலது பக்கமா என்று குறிப்பிட்டு கூறவில்லை ஆனால், திருவட்டார் செல்லும் சாலையில் என்று குறிப்பிட்டுள்ளார். புகாரில் சம்பவ இடம் பற்றி குறிப்பிட்டு கூறாத நிலையில் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் தயார் செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாகனத்தை சோதனை செய்ய எழுத்து பூர்வ உத்தரவு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். பணிமனை மேலாளரை சாட்சியாக விசாரிக்கவில்லை. வாகனத்தில் ஆட்கள் இருந்ததாகவோ, அவர்கள் அரசு அனுமதியின்றி பயணித்து வந்ததாகவோ சாட்சிகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சட்ட விரோதமாக ஆட்களை ஏற்றுவதாக பொது மக்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை. சாலையில் செல்லும் வாகனங்களை வழிமறித்து சோதனை செய்ய காவல்துறை மற்றும் வட்டாரபோக்குவரத்து அலுவலருக்கு மட்டுமே அனுமதி உண்டு என்றால் சரிதான். போக்குவரத்து பணிமனை ஊழியர்களுக்கு வாகனங்களை மறித்து சோதனை செய்ய அதிகாரமில்லை. அ.சா. முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் முன்பு எதிரி வேனை நிறுத்தி ஆட்களை ஏற்றியதாகவோ, அல்லது இறக்கியதாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி அரசுக்கு இழப்பு ஏற்படுத்தும் விதமாக வாகனத்தை இயக்கவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சியில் வாகனம் யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் எதிரியின் கையொப்பமும் இல்லை. TN 75 B 1189 வாகனத்தின் உரிமையாளர் எதிரி இல்லை என்றால் சரிதான். வாகன உரிமையாளர்

.4.

எதிரியை ஓட்டுனராக வைத்திருப்பதாக வாக்குமூலம் கொடுக்கவில்லை. எதிரி சம்பவ நாளன்று TN 75 B 1189 வாகனத்தை ஓட்டி வரவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட வாகனத்திற்கும், எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் வாகன எண். நிறம் ஆகியவை குறிப்பிடப்படவில்லை. நான் சொன்னது போல் வாகனத்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக வாகனம் பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி அபாயகரமான ஆயுதம் கொண்டு மிரட்டியதாக சாட்சிகள் வாக்குமூலம் கொடுக்கவில்லை. புகார்தாரருக்கு காயம் ஏற்பட்டதாகவோ, சிகிச்சை பெற்றதாகவோ ஆவணங்கள் இல்லை. அ.சா.1 பணியை முடித்த பிறகு வீட்டிற்கு திரும்பி போனார் என்றால் சரிதான். எதிரிக்கும். அ.சா.1க்கும் முன்விரோதம் எதுவும் இல்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அ.சா.1க்கும், எதிரிக்கும் முன்விரோதம் இருந்ததாக வாக்குமூலம் கொடுக்கவில்லை. முன்விரோதம் இல்லாததால் அ.சா.1ஐ கொலை செய்ய வேண்டிய அவசிமில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மதம் இல்லை என்றால் சரியல்ல.